

# தமிழ் வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 46

## அறிவிப்புகள்

## 2015 - 2016

# தமிழ் வளர்ச்சித் துறை

மானியக் கோரிக்கை எண்–46

# அறிவிப்புகள்
# 2015–2016

திரு. கே.சி. வீரமணி
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை அறிவிப்புகள் 2015–2016

## 1. தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்களுக்கு வாழ்நாள் உதவித்தொகை

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள் மற்றும் மரபுரிமையர்கள் மொத்தம் 51 பேருக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 19 லட்சத்து 70 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

## 2. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ஓய்வூதியம்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் உதவித் தொகையாக ரூபாய் **2000** மற்றும் மருத்துவப்படி ரூபாய் **100** பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை **30**–லிருந்து **50**ஆக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூபாய் **12** லட்சத்து **60** ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

## 3. வலைசார் சொல்வங்கித் திட்டம் (Web Enabled Word Bank)

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** புதியதாக உருவாகிவரும் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கி இணையத்தில் பதிவேற்றி உலகளவில் உள்ள தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் அச்சொற்களைத் தேவைப்படின், தரப்படுத்தியும் உலகளவில் ஒரே வகையான தமிழ்ச்சொல்லை பயன்பாட்டிற்குக் கொண்டு வரச் 'சொல் புதிது' என்ற வலைசார் சொல்வங்கி மையம் அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பெறும்.

## 4. திருக்குறள் ஒப்பித்தல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** உலகப் பொதுமறையாம் திருக்குறளை முழுமையாக ஒப்பிக்கும் மாணவ, மாணவியர்கள் 36 பேரை ஆண்டுதோறும் தேர்வு செய்து அவர்களுக்கு குறள் பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/– வழங்கப்பட்டு வருகிறது. இம்மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 36–லிருந்து 50 ஆக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக ரூபாய் 5 லட்சம் செலவினம் ஏற்படும்.

## 5. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தகவல் மையம்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது அவர்களுக்குத் தேவையான விவரங்களையும், பிற உதவிகளையும் மற்றும் உலகில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகள் பற்றிய தகவல்களையும் அளித்து உதவும் வகையில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் **5** லட்சம் வழங்கப்படும்.

## 6. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் மின்னிதழ்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** உலகளாவிய தமிழ் அமைப்புகளுக்குத் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகளை எடுத்துச்செல்ல மின்னிதழ் ஒன்று மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தப்படும். இதற்கென ரூபாய் 5 லட்சம் வழங்கப்படும்.

## 7. தமிழ் மற்றும் பிற மொழிகளுக்கும் உள்ள வேர்ச்சொற்கள் ஆய்வு

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ் – சீனம், தமிழ் – கொரியம் ஆகிய மொழிகளுக்கிடையேயான வேர்ச்சொல் ஒற்றுமைகள் பற்றிய ஆய்வு நூல் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக வெளியிடப்பெறும். இதற்கென ரூபாய் 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 8. தேசிய – பன்னாட்டுக் கருத்தரங்குகள்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் நான்கு கல்விப் புலங்களிலும் வளர்ந்து வரும் துறைசார் ஆய்வுக்கோட்பாடுகளை இளம் ஆய்வாளர்கள் அறிந்து பயன்கொள்ளும் வகையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் தேசியக் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்கெனப் புலம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் நான்கு புலங்களுக்கு ரூபாய் 10 லட்சம் ஆண்டுதோறும் வழங்கப்பெறும்.

## 9. தமிழ்க் காட்சிக்கூடங்கள் பராமரிப்பு

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட திருக்குறள் காட்சிக் கூடம், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம், உலகத் தமிழர் பண்பாட்டு மற்றும் வரவேற்பு மையம், சுவடிப் பாதுகாப்பு மையம், தொல்காப்பியர் ஆய்வறிக்கை, மொழிப் பயிற்சிக் கூடம் ஆகியவற்றின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூபாய் **15** லட்சம் வழங்கப்படும்.

**கே.சி. வீரமணி**
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

“தொல் மொழிகளில் இன்று பேச்சு
வழக்கில் இருந்து வருகின்ற ஒரே மொழி
நம் தமிழ்மொழியாகும். தமிழ்மொழியை
நம் உயிரெனப் பேணிக்காத்து,
எதிர்வரும் நூற்றாண்டுகளின்
சவால்களை எதிர்கொள்கின்ற
ஆற்றலையும் அறிவையும் அளிப்பதே
இன்றைய நமது கடமை”

**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்